தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **5-8-2014**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**சிறுதானிய உற்பத்தி பெருக்குவதற்கான கலந்தாலோசனை கருத்தரங்கு**

அதிக அளவு உணவு உற்பத்தியை விட, சத்து மிகுந்த சிறுதானியங்களை உற்பத்தி செய்வதே நம் நாட்டில் தற்பொழுது நிலவும் குழந்தைகளின் சத்து குறைவு மற்றும் வாழ்வியல் நோய்களை கட்டுப்படுத்துவதற்கான வழி என்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் கு. ராமசாமி அவர்கள் தெரிவித்தார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மற்றும் தானம் அறக்கட்டளை, மதுரை இணைந்து நடத்திய “தேசிய சிறுதானிய உற்பத்தி பெருக்கத்திற்கான கலந்தாலோசனை கருத்தரங்கில்” தொடக்க உரையைஆற்றும் பொழுது இந்த கருத்தை தெரிவித்தார். வளர்ச்சி என்ற பெயரில் நம் பாரம்பரிய அறிவையும் உணவு பழக்கத்தையும் தொலைத்து விட்டு, காலத்தாமதமாக அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இழந்தவற்றை மீட்க நாம் போராடிக்கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்தார். சிறுதானியங்களில் உடலுக்கு தேவையான தாது பொருட்கள், வைட்டமின்கள், நார்ச்சத்து ஆகியவை அதிகம் உள்ளதால் நலமான வாழ்விற்கு அவை பேரிதும் உதவும் எனறு அவர் தெரிவித்தார்.

திரு. M. கார்த்திகேயன், முதன்மை ஆராய்ச்சியாளர் சிறுதானிய மறுமலர்ச்சி திட்டம் அவர்கள் பேசும் போது கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் **5-8-14** மற்றும் **6-8-14** ஆகிய இரு நாட்களுக்கு இந்த கலந்தாலோசனை கூட்டம் நடைபெற இருக்கின்றது என்று தெரிவித்தார். மேலும் அவர் பேசும் போது இந்தக்கூட்டத்தில் சிறுதானிய விவசாயிகள், சிறு வியாபாரிகள், மொத்த வியாபாரிகள், சிறுதானிய மதிப்பு கூட்டிய பொருள் உற்பத்தியாளர்கள், இயந்திர தயாரிப்பாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டு விவாதிக்க இருக்கின்றனர். சிறுதானிய உற்பத்தி முதல் விற்பனை வரை இன்று நிலவும் சூழ்நிலை, அதில் உள்ள பிரச்சினைகள், தீர்வுகள் மற்றும் நுகர்வை அதிகப்படுத்துவதே நோக்கம் என்று தெரிவித்தார்.

திரு. M.P. வாசிமலை, நிர்வாக இயக்குநர், தானம் அறக்கட்டளை அவர்கள் “சிறுதானிய நுகர்வு, சாகுபடி, சிறுதானிய ரகங்களை பாதுகாத்தல் மற்றும் அதன்

வியாபாரத்தை பெருக்குதல் மூலமாக தான் நாம் சிறுதானிய உற்பத்தியில் நாம் விரும்பும் மறுமலர்ச்சியை காண முடியும். சிறுதானியம் தொடர்பான செயல்களில் ஈடுபட்டுள்ள விவசாயி முதல் வியாபாரிகள், ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் இணைந்து செயல்பட்டால்தான் இது சாத்தியமாகும்" என்று கூறினார். மேலும் இது மாதிரியான கலந்தாலோசனை கூட்டத்தை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடத்த வேண்டும் என்ற தனது ஆவலை தெரிவித்தார்.

டாக்டர். கிரித் பட்டேல், பேராசிரியர், கனடா மின்னசோட்டா பல்கலைக்கழகம் அவர்கள் தனது சிறப்புரையில் "இந்த சிறுதானிய ஆராய்ச்சித்திட்டத்தில் கனடா நாட்டை சார்ந்த 5 பல்கலைக்கழகங்களும் ஈடுபட்டுள்ளன. இந்தியாவில் தமிழ்நாடு வேளாண்மை கழகம், தானம் அறக்கட்டளையும் இந்த ஆராய்ச்சிக்கு பெரும் உதவி செய்து வருகின்றனர். சிறுதானிய உணவின் மகத்துவத்தை நாம் உணர்ந்து, தமிழ்நாட்டில் உள்ள அனைவரும் மாதம் ஒரு கிலோ சிறுதானிய உணவை உட்கொள்ள நினைத்தால், இன்றைய சூழலில் அது முடியுமா என்றால் முடியாது. ஏனென்றால் ஒரு நபர் ஒரு மாதத்திற்கு வெறும் 150 கிராம் உண்ணும் அளவிற்கு தான் உற்பத்தி இருக்கிறது என்று எங்களுடைய ஒரு ஆராய்ச்சி. எனவே சிறுதானிய உற்பத்தியை பெருக்குவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார். இந்த கலந்தாலோசனை கருத்தரங்கில் 80க்கும் மேற்பட்ட விவசாயிகள், உணவு உற்பத்தியாளர்கள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வளர்ச்சி நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்னதாக திருமதி. D. மாலதி, பேராசிரியர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. ஆ. படினிச்சாமி, திட்டத்தலைவா, தானம் அறக்கட்டளை நன்றியுரை ஆற்றினார். மேற்கண்ட செய்திக்குறிப்பை தங்கள் நாளிதழில் வெளியிடும் படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு திரு. S. ரமேஷ், தானம் அறக்கட்டளை, அலைபேசி -97882 12602.

மக்கள் தொடர்பு அலுவலர்